**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 19-6-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் முதுநிலை பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2015-16ம் ஆண்டிற்கான முதுநிலை பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கையானது முதுகலை பட்டபடிப்பில் 33 துறைகளிலும், முனைவர் பட்டப்படிப்பில் 26 துறைகளிலும் ஒருங்கிணைக்கப்பட்ட முனைவர் பட்டப்படிப்பில் (Integrated Ph.D.) நான்கு துறைகளிலும் மற்றும் பகுதிநேர முனைவர் ஆராய்ச்சி பட்டப்படிப்பில் (Partime Ph.D. by research) 26 துறைகளிலும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கோவை, மதுரை, திருச்சி, குமுளூர், கிள்ளிகுளம், பெரியகுளம் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய கல்லூரிகளில் 2015-16 கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை இணையதள வழியாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

www.tnau.ac.in என்ற பல்கலைக்கழக இணையதள வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணபிக்கும் பொழுது, விண்ணப்பக் கட்டணத்திற்கான (Rs. 1000/- SC/ST Rs. 500/-) வங்கி தொடர்பான இணைப்பு தரப்பட்டிருக்கும்.

இணையதளம் மூலம் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவிறக்கம் செய்து அதனுடன் தகவல் குறிப்பேட்டில் (Information Brochure) குறிப்பிட்ட அனைத்து தேவையான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பக் கட்டணத்திற்கான (பொதுப்பரிவினருக்கு Rs. 1000/- மற்றும் SC/ST Rs. 500/- (ஒரு பாடத்திற்கு)) ரசீது (e-receipt) ஆகியவற்றையும் இணைத்து **முதன்மையர், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

முதுகலை பட்டமேற்படிப்பிற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி தேதி 13-7-2015. முனைவர் பட்டமேற்படிப்பிற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி தேதி 24-7-2015.

நுழைவுத்தேர்வு மற்றும் மாணவர் சேர்க்கை பற்றிய அனைத்து தகவல்களும் மின் அஞ்சல் (E-mail) மூலமாக மட்டுமே தெரிவிக்கப்படும். ஆகவே அனைத்து மாணவர்களும் தங்களது மின் அஞ்சல் மற்றும் கைபேசி எண் சரியாக விண்ணப்படிவத்தில் பதிவு செய்ய வேண்டும், மேலும் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தினையும் தினமும் தவறாது பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## நினைவில் கொள்ள வேண்டிய நாட்கள்

| விவரம் | முதுநிலை | முனைவர் |
|---|---|---|
| இணைய தள விண்ணப்பம் துவங்கும் நாள் | 20-6-2015 | 20-6-2015 |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 13.07.2015 | 24.07.2015 |
| நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள் | 22.07.2015 | 05.08.2015 |
| தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வெளியிடும் நாள் | 04.08.2015 | 11.08.2015 |
| மாணவர் சேர்க்கை மற்றும் கல்லூரி தொடங்கும் நாள் | 17.08.2015 | 18.08.2015 |
| முதல் பருவம் பதிவு செய்ய வேண்டிய நாள் | 19.08.2015 | 19.08.2015 |

உதவி மக்கள் தொர்பு அலுவலர்